அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.296

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
19 ஜூன், 1985.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்கள் யாவர்க்கும்.

கடமையின்போது கொல்லப்பட்ட உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் விதவைகளுக்கும், குழந்தைகளுக்கும் உடல்வலு விழந்த உத்தியோகத்தர்களுக்கும் ஊழியருக்கும் நட்டஈடு.

---

பயங்கரவாதிகள் சுறுசுறுப்பாக இயங்கும் பெரும் அபாயம் நிறைந்த பிரதேசங்களில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொழுது பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் நிரந்தரமாக வலுவிழந்த அரசாங்க உத்தியோகத்தர், அரச கூட்டுத்தாபன ஊழியர், உள்ளூராட்சி ஊழியர், ஒருவருக்கு நடைமுறையிலிருக்கும் உரித்துரிமைக்கு மேலதிகமாக, அத்தகைய ஊறுகள் ஏற்பட்ட நேரத்தில் அவர் பெற்று வந்த முழு வேதனமும் படிகளும், அந்த ஊறு நிகழ்ந்த திகதிக்குப் பின் சேர்ந்த அதிகரிப்புகள் அல்லது சம்பளம் ஏதுமிருப்பின் அவையும் உள்ளடக்கியதாக அவர் 55 வயதை அடையும் வரை அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

..3

02. பயங்கரவாதிகள் சுறுசுறுப்பாக இயங்கும் பெரும் அபாயம் நிறைந்த பிரதேசங்களில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஓர் அரசாங்க உத்தியோகத்தர், அரச கூட்டுத்தாபன ஊழியர் அல்லது உள்ளூராட்சி உத்தியோகத்தர் கொல்லப்படும் சந்தர்ப்பத்தில் வழக்கிலுள்ள உரிமைகளுடன் அவரது விதவைக்கும், பிள்ளைகளுக்கும் மேலதிகமாக

(அ) காலஞ் சென்ற உத்தியோகத்தர் இறக்கும் தறுவாயில் அவருக்கு வழங்கப்பட்டதும் அவர் 55 வயதுக்கு உயிர் வாழ்ந்திருப்பின் அதுவரை அவருக்குக் கிடைத்திருக்கக் கூடியதும் அவர் உயிர் வாழ்ந்து சேவையிலும் இருந்தாரெனில் காலத்துக்குக் காலம் அந்த உத்தியோகத்தருக்கு சேர்ந்திருக்கக் கூடிய வேதன அதிகரிப்புகளும் படிகளும் உட்பட முழுச் சம்பளமும் படிகளும் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) விசேட சந்தர்ப்பங்களில் ஆகக் கூடியது ரூ. 150,000/- வரை பின்வரும் முறையில் தண்ணிக் கொடுப்பனவாக வழங்கப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| (1) மனைவி | ரூ. 75,000/- |
| (11) குழந்தைகள் | |
| (அ) 10 வயதும் அதற்குக் குறைந்தவர்களும் | ரூ. 18,750/- |
| (ஆ) 10 வயதுக்கு மேற்பட்டவர்களும் 15 வயதுக்குக் குறைந்தவர்களும் | ரூ. 14,065/- |
| (இ) 15 வயதுக்கு மேற்பட்டவர்களும் 18 வயதுக்குக் குறைந்தவர்களும் | ரூ. 9,375/- |

(111) மனைவி இறந்திருந்தால் ரூ. 150,000/- தொகை பின்வரும் அடிப்படையில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.

| | |
|---|---|
| (அ) 10 வயதும் அதற்குக் குறைந்தவர்களும் | ரூ. 37,500/- |
| (ஆ) 10 வயதுக்கு மேற்பட்டவர்களும் 15 வயதுக்குக் குறைந்தவர்களும் | ரூ. 28,125/- |
| (இ) 15 வயதுக்கு மேற்பட்டவர்களும் 18 வயதுக்குட்பட்டவர்களும் | ரூ. 18,750/- |

குறிப்பு:- (அ) (11)-ஆம், (111)-ஆம் பிரிவுகளின் கீழ் நன்மை பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆகும். தகுதியுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை 4-க்கு அதிகரித்தால் தொகை குழந்தைகள் அனைவருக்கும் விகிதாசாரப்படி பகிர்ந்து வழங்கப்படும்.

(ஆ) திருமணமாகாத உத்தியோகத்தர் பற்றிய வகையில் இறந்த உத்தியோகத்தரின் பெற்றோர்கள் அவரில் தங்கியிருப்பின் ரூபா. 75000/- பெற்றோருக்கு வழங்கப்படும். பெற்றோரில் ஒருவர் இறந்தால் உயிருடன் இருக்கும் மற்றவருக்கு முழுத் தொகையும் வழங்கப்படும்.

ஒப்பம்.டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு